# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண்.418 நாள்: 24.08.2026

**தேனாம்பேட்டை மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.08.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-123க்குட்பட்ட லஸ் சர்ச் சாலையில் உள்ள நாகேஸ்வரா ராவ் பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, டாக்டர் அன்னி பெசன்ட் பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, வார்டு-116க்குட்பட்ட டாக்டர் பெசன்ட் சாலையில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுமானப் பணி, அப்பகுதியில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டுமானப் பணி மற்றும் அங்கன்வாடி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், பூங்காக்களில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளையும், கட்டுமானப் பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**